2010 மே 11] *[திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்]*

ஒரு பதிலும் சொல்லியிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால், அதைவிட கொள்கை விளக்கக் குறிப்பிலே மிக விளக்கமாக இரயில்வே கடவிலே கட்டப்பட வேண்டிய, அனுமதி பெறப்பட்ட பாலங்களினுடைய விவரங்களை விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். எனவே, மீண்டும் கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் எண் 88–ஐ மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனமாக இரண்டு, மூன்று பக்கங்களைப் படித்தால் முழு விளக்கத்தையும் அறிந்துகொள்ளலாம். அதற்குப் பிறகு, நேரிலேயும்கூட நான் அதற்குரிய விளக்கத்தைத் தர கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, ஈரோடு நகரிலே அறிவிக்கப்பட்டிருக்கிற மேம்பாலங்களைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கம் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நம்முடைய ஈரோடு மாநகரிலுள்ள பன்னீர்செல்வம் பூங்கா அருகிலே பாலப் பணி இன்னும் ஒரு வாரத்திலே தொடங்கப்படவிருக்கிறது. அதற்குப்பிறகு, அரசு மருத்துவனை அருகிலே ஓர் உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு அங்கே இடப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தினால் நிலம் கையகப்படுத்தாமல் முடிந்த அளவு அந்த இடத்திலே ஒரு மேம்பாலம் அமைப்பதற்கு வடிவமைப்பு இறுதி செய்யப்பட்டு வருகிறது. மாவட்ட நிருவாகத்தின் மூலமாக அதற்குரிய அனுமதியைப் பெறுகிற சூழ்நிலையிலே இந்த ஆண்டு அதற்குரிய பணியையும் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.*

திரு. குத்தாலம் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2009–2010 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் இருபத்து ஒன்பதாவது மற்றும் முப்பதாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS LEGISLATIVE ASSEMBLY